NOVEMBER/DECEMBER 2025

23UTA12/23ITA12 — தமிழக வரலாறும் பண்பாடும் — I

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)



அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. வரலாற்றுக்கு முன்பட்ட காலத்தை அறிய உதவும் சான்றுகள் இரண்டினைத் தருக.

2. சிந்துவெளி அகழ்வாராய்ச்சி நடைபெற்ற இடங்களை எழுதுக.

3. சங்கம் இருந்தாமைக்கான இலக்கியச் சான்றுகள் இரண்டினைக் குறிப்பிடுக.

4. தமிழக வரலாற்றில் இருண்ட காலத்தைச்சுட்டுக.

5. 'சித்திரக்கார புலி' என்றழைக்கப்பட்ட பல்லவ மன்னன் யார்?

6. நாலாயிர திவ்யப் பிரபந்தத்தைத் தொகுத்தவர் யார்?

7. கங்கை கொண்டான், கடாரம் கொண்டான் என அழைக்கப் பெற்ற மன்னன் யார்?

8. பாளைப்பட்டு ஆட்சி முறை - குறிப்பு வரைக.

9. உ.வே.சா. பதிப்பித்த நூல்கள் நான்கினைக் கூறுக.

10. திராவிட இயக்கம் உருவாகக் காரணமாக இருந்தவர் யார்?

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) பிற நாட்டாரோடு தமிழகம் கொண்டிருந்த வாணிபத் தொடர்பினை விளக்குக.

(அல்லது)

(ஆ) தமிழரின் தொன்மையை விளக்குக.

12. (அ) சங்க கால மக்களின் அகவாழ்க்கை நெறியினை விளக்குக.


(அல்லது)

(ஆ) களப்பிரர்கள் தமிழகத்தில் குடியேற்றமைக்கான காரணங்களை எழுதுக.

13. (அ) பல்லவர்களின் கலைத்திறனை விளக்கு.

(அல்லது)

(ஆ) பல்லவர்கள் சமய வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டினை விளக்கு.



14. (அ) அயல்நாட்டில் தமிழர் ஆட்சி பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) நாயக்கர்களின் ஆட்சிமுறையினை விளக்கு.

15. (அ) தமிழ் இலக்கிய மறுமலர்ச்சியினை விளக்குக.

(அல்லது)

(ஆ) சி.வை. தாமோதிரம் பிள்ளையின் தமிழ்ப் பணியினை விளக்குக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. கற்கால மக்களின் வாழ்க்கை முறையினைத் தொகுத்துரைக்க.

17. மூவேந்தர்களின் ஆட்சி சிறப்பினை எடுத்துரைக்க.

18. பல்லவர் காலத்தில் தமிழர் பண்பாடு குறித்து விளக்குக.

19. சோழர்களில் சமயப் பணியை விவரி.

20. தமிழர்களின் சமூக எழுச்சியினை கட்டுரைக்க.
